**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : திரு. R.பாண்டி மகாராஜா B.Sc.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ம் நாள் வியாழக்கிழமை
**இ.ம.எண்.6/2025 in அ.வ.எண்.392/2015**

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் டவுன், பொன்னு ஸ்கூல் பின்புறம், சேரன் நகரில் வசித்து வரும் சுப்பிரமணி மகன் சுமார் 59 வயதுள்ள K.S.கோவிந்தராஜ் ...மனுதாரர்/பிரதிவாதி

...எதிராக.....

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளத்துப்பாளையம் கிராமம், ஆச்சியூரில் வசித்து வரும் குப்புசாமி மகன் சுமார் 61 வயதுள்ள K.துரைசாமி

....எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கட்டளை XXVI, விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுச் சொத்தினை பார்வையிட்டு நிலஅளவையர் மூலம் அளவீடு செய்து தாவா தடத்தின் அத்தை நிர்ணயம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கல் நாள்:–** 28.03.2025

இம்மனுவானது 30.10.2025 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.S.T.சேகர் B.Sc.,LL.B., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.R.சுப்பிரமணியன் B.Com.,LL.B., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனு எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**"இறுதி உத்தரவு"**

இந்த மனுவானது செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இன்று இந்த உத்தரவு 2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ம் நாள் என்னால் கையெழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

Sd/–திரு.R.பாண்டி மகாராஜா
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.

<u>சொத்து விவரம்</u>

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், தாராபுரம் சார் பதிவு வட்டம், தாராபுரம் வட்டம், கொளத்துப்பாளையம் கிராமம் புலத்தில் புதிய ரீசர்வே எண்.266/3 எண் காலை பு.ஹெக்.0.55.5–க்கு த.ரூ.0.75 (இதற்கு பழைய க.ச.2414 எண் காலை பு.ஏ.4.65) இதில் கருப்பாத்தாள் பூமிக்கு கிழக்கு, முத்துச்சாமி பூமிக்கும் தெற்கு, ரத்தினசாமி வகையரா பூமிக்கும் மேற்கு, கே.துரைசாமி பூமிக்கும் வடக்கு இதன் மத்தியில் பு.ஏ.0.77–1/2 (இதற்கு பு.ஹெக்.0.31.37) உள்ள புஞ்சை பூமி பூராவும் மேற்படி பூமிக்கு மேற்படி காலையில் உள்ள எம்.ஆறுமுகம் அவர்களின் பூமியில் கிழகோட்டில் தென்வடலாக நடந்து கொள்ளும் வழிநடை தட பாத்தியங்களும் மற்றும் மேற்படி தடத்தில் வண்டி, கால்நடை, ஆட்கள் கோட்டேறு போய் வந்து கொள்ளும் பாத்தியமும், இதர மாமூல் பாத்தியங்கள் சகிதம்.

Sd/–திரு.R.பாண்டி மகாராஜா
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.